7th March 1961]

SRI S. NAGARAJA MONIGAR : இந்த நாய்கள் துப்பறிவது அவைகளுக்குள்ள தனி சாமர்த்தியத்தின் காரணமாகவா? அல்லது அந்த இனத்தைச் சேர்ந்த நாய்களுக்கே அந்த சக்தியிருக்கிறதா? அல்லது சொல்லிக் கொடுப்பவரின் திறமையால் பழக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சற்று முன்பு விடையளிக்கும்போது சொன்னேன். சில குட்டிகளுக்கு மதுரை Squad -க்காக இப்பொழுது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே பயிற்சியில்லாமலேயே பிறப்பிலேயே இந்த அறிவு ஏற்படுவதில்லை.

SRI P. S. SANTHANAM : இந்த துப்பறியும் நாய்கள் பிடித்த கேஸ்கள் எவ்வளவு வெற்றி பெற்றிருக்கின்றன? எவ்வளவு உதவாக்கரையாகத் தள்ளப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை, ஆனல் அநேகமாக பல கேஸ்கள் துப்பு தெரிந்து கேஸ்கள் தொடரப்பட்டு, வெற்றிகரமாக வழக்குகள் தொடரப்பட்டு தண்டனைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

SRI A. A. RASHEED : Will the Government consider the question of extending the Dog Squad to the headquarters of districts also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதன்முதலாக மதுரையில் வைப்பது என்று முடிவு செய்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இதைப் பார்த்து பின்பு கோவையில் வைக்கலாம், பின்னர் மற்ற ஜில்லாக்களை எடுத்துக்கொள்ளலாம்.

SRI A. GOVINDASAMY : சில இடங்களில் குற்றவாளிகள் அல்லாதவர்களைக்கூட இந்த துப்பறியும் நாய்கள் பிடிக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே, நிரபராதிகளைக் காப்பாற்றுவதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மனிதனே தவறு செய்வது இயற்கை. ஆகவே நாய்களும் தவறு செய்யலாம். அப்படித் தவறு ஏதாவது இழைக்கப்பட்டால் நீதி செலுத்த கோர்ட்டார் இருக்கிறார்கள்.

Hospitals (Major Panchayat Towns)

* 641 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பத்தாயிரம் மக்களுக்கு மேலுள்ள ஒவ்வொரு மேஜர் பஞ்சாயத்து நகரிலும் பத்து படுக்கைகளுடன் ஒரு ஆஸ்பத்திரி அமைக்க ஏதேனும் திட்டமிருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. SUBBIAH : இப்பொழுது கிராமப்பகுதிகளில் வைத்திய சாலைகள் இல்லாத நிலை, டாக்டர்கள் இல்லாத நிலை, மருந்து இல்லாத நிலை இருப்பதால் 10,000 ஜனத்தொகையுள்ள இடங்களிலாவது வேண்டிய வைத்திய வசதியுடன் கூட எம்.பி.பி.எஸ். டாக்டர்களைப் போட ஏதாவது திட்டமிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : 60,000 ஜனத்தொகைக்கு ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் என்ற நிலையை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். 127 ப்ரைமரி சென்டர்கள் சாங்க்ஷனாகியிருக்கிறது. 117 தீர்ந்துவிட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 220 சென்டர்கள் திறக்க உத்தேசம். பின், 78 கவர்ன்மென்ட் டிஸ்பன்ஸரிகள், 259 சப்ஸிடைஸ்ட் ரூரல் டிஸ்பன்ஸரீஸ், 83 நான்-ஸப்ஸிடைஸ்ட் டிஸ்பன்ஸரீஸ், என்று எவ்வளவோ இருப்பதால் அநேகமாக எல்லாயிடங்களுக்கும் சிகிச்சை வசதி கிடைக்கும். அதோடு முக்கிய இடங்களில் படுக்கைகள் உள்ள ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தவும் தீர்மானம்.

Hindi Pandits

* 642 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஹிந்திப் பண்டிதர்களைக் காட்டிலும் ஜில்லா போர்டு பள்ளிகளிலும், இதர உதவி பெறும் பள்ளிகளிலும் வேலை பார்க்கும் அதே தகுதியுள்ள ஹிந்திப் பண்டிதர்களுக்குச் சம்பளத்தில் குறைவு ஏதேனும் உண்டா ?

(இ) அப்படியானால், அதன் காரணமென்ன ?

(உ) வேலை நேரத்தில் வித்தியாசம் காட்டப்படுகிறதா ? அதன் விவரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir. The Government have fixed uniform scales of pay for the Hindi Pandits serving under different managements from 1st June 1960.

(*b*) & (*c*) Do not arise.

SRI A. VEDARATHNAM : இந்த சம்பள விகிதத்தை எல்லோருக்கும் ஒரே மாதிரியாக ஏற்படுத்திய பிறகு இன்னும் பல ஹிந்தி பண்டிதர்களுக்கு உயர்த்தப்பட்ட சம்பளம் கொடுக்கப்படவில்லையே, அதன் காரணம் என்ன ? அதைக் கொடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லோருக்கும் ஒரே விகிதத்தில் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டாய் விட்டது. எங்கேயாவது அவ்விதம் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்றிருந்தால் அதைப்பற்றி சர்க்காருக்குத் தெரிவித்தால் அதன் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.